முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.08.2022, திங்கட்கிழமை

1. சக்திமிகு சன்மார்க்க நெறியை
சகலருக்கும் ஞானமாக அருளி
பக்திபட சரவணச் சுடரேற்றி
பாமரரும் ஞானவான்கள் ஆக
2. ஆகவே அற்புதம் நிகழ்த்துகின்ற
அரங்கனே உன் பெருமை கூறி
வகைபட சுபகிருது யாளி திங்கள்
வரமாக முன்னான்கோர்திகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 13 நாள், 29.08.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் அருளாசி தன்னை
வழங்குவேன் மதுரகவி ஆழ்வாரும்
சோரமிலா ஞானவான்கள் படைக்க
சுருதிபடி அரங்கன் கேட்க அருள்வேன்
4. அருளவே அன்னதான நெறி
அவரவர் வினை போக்கும் நெறி
அருளமுதாக அரங்கன் தருகின்ற
ஆற்றல் மிக்க பிரணவக் குடில் அமுது
5. அமுது அவரவர் பிணி அகற்றிடும்
ஆற்றல் கூடிய அருமருந்து
நேமமுடன் உயிர்கொலை நீக்கி
நிலமதனில் அரங்கன் தரும் தயவு
6. தயவுகலந்த சுத்த சன்மார்க்கமே
தரணி காக்கும் உயர் நெறி
தயவோடு எவர் பற்றி நின்று
தவராஜனிடம் முழு சரணடைவு
7. சரணடைவு கொண்டு வருகின்றாரோ
சகலரும் சோரம்போகா வண்ணம்
சரணாகதி வழி ஞானவானாகி
சரவணப்பெருமான் சக்தி கிட்டி
8. கிட்டியே கலியிடரை வென்று
குவலயத்தை ஞானவழிதனில்
மீட்கும் ஆளும் வல்லமை கூடி
முருகப்பெருமான் தலைமை கொண்ட
9. கொண்டநல் ஞான ஆட்சி படைப்பர்
குறைவிலா அரங்கன் தருமவழி
தொண்டுகள் பெருகி தொண்டர்படை
தேசிகன் வழிகாட்டலாகப் பெருகி

10. பெருகியே இந்தப் பேருலகம் எங்கும்
பெருமைபட இயற்கை பாதுகாப்பும்
தருமம் நிரம்பிய தலைமையும்
தனித்துவம் கொண்ட வண்ணம்

11. வண்ணமுடன் ஞானிகள் மிகுந்த
வளமான வல்லமை கூடிய
அண்ணலின் ஞான ஆட்சி மலரும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–